# கிறிஸ்தவ வாழ்க்கை வாழுதல்



இந்த புத்தகம் சொந்தமானது:

___

# கிறிஸ்தவ வாழ்க்கை வாழுதல்

## இளம் விசுவாசிகளுக்கான ஒரு கைநூல்

(வயதெல்லை 3ம் ஆண்டு – 6ம் ஆண்டு)

எழுதியவர் மேரி லூ கனற்றா
படம் வரைந்தவர் எரிக் ஜான்சன்

அச்சிட்டது
நாற்சதுர மிஷன் அச்சகம்

© 2017

# பொருளடக்கம்

முன்னுரை 3

பாடம் 1 6

நான் ஒரு கிறிஸ்தவன் - இப்போது என்ன?

(கிறிஸ்தவ குடும்பத்தில் வளருகிறேன்)

பாடம் 2 11

இயேசுவுக்காக வாழுகிறேன்

(நாளாந்த கிறிஸ்தவ ஜீவியம்)

பாடம் 3 15

இயேசுவைப் பற்றி வாசிக்கிறேன்

(வேத வாசிப்பும் கற்றுக்கொள்ளுதலும்)

பாடம் 4 19

தேவனுடன் பேசுதல்

(ஜெப ஜீவியம்)

பாடம் 5 23

ஆராதிக்க ஒரு இடம்

(ஆலய வாழ்க்கை)

பாடம் 6 28

இயேசுவை மற்றவர்கட்குச் சொல்லுதல்

(மற்றவர்கட்குச் சாட்சி பகருதல் /

நற்செய்தி அறிவித்தல்)

## தேவனுடைய குடும்பத்திற்கு வரவேற்கிறோம்



நீங்கள் இப்போது தேவனுடைய பெரிய கிறிஸ்தவ குடும்பத்துக்குச் சொந்தமானவர்கள் என்று அறிந்து கொள்வது ஒரு மகிழ்ச்சியான காரியமில்லையா? நீங்கள் தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தவர். இயேசுவை உங்கள் இரட்சகராக விசுவாசித்து அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள நேரம் செலவிடும் போது, எப்போதும் அவருடைய குடும்ப உறுப்பினராக இருப்பீர்கள்.

தேவனுடைய குடும்பத்தில் சிறுவர்கள், சிறுமியர், வாலிபர்கள், வயதுவந்தவர் என்று எல்லோருமே உண்டு. நாங்கள் சகோதரரும், சகோதரிகளுமாவோம். தேவன் நமது பரலோக தகப்பன்.

உங்கள் தவறான செய்கைகளுக்காக தேவனிடம் மன்னிப்பு கேட்பது என்பது உங்கள் பழைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, மறந்து விடப்படும் என்று அர்த்தமாம். இயேசு உனக்காக சிலுவையில் மரித்தபடியால் இது உண்டாயிற்று.

தேவனின் குடும்பத்தில் அங்கத்தவராகவும், ஒரு கிறிஸ்தவனாகவும் இருக்கும் போது நீங்கள் தேவனைப் பிரியப்படுத்தும் வாழ்வை வாழ வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார். அவரின் உதவியுடன் வீட்டில், பாடசாலையில், ஆலயத்தில், விளையாட்டில் எவ்விடத்திலும் அவ்விதமாக வாழலாம்.

தேவன் உங்களிடம் எதைக் கேட்கிறார் என்று அறிந்துகொள்ள இந்தப் புத்தகம் உதவி செய்யும். இப்போது நீங்கள் அவருடைய குடும்ப அங்கத்தவர். எனவே இயேசு கிறிஸ்துவை பிரியப்படுத்தவும், அவருக்கு சேவை செய்வதற்குமான வழியையும் நீங்கள் கற்றுக் கொள்ளலாம். அவரே உங்கள் இரட்சகரும் நண்பனுமானவர். நீங்கள் ஒரு பெலமுள்ள கிறிஸ்தவனாக வளருவீர்கள்.

## இந்த வேத வசனத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்.

“இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்” லூக்கா 2:52

இந்தப் பெட்டியில் உங்களை வரைந்து கொள்ளுங்கள்!

நான் ............................................. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை எனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன் .........................

..........................

உங்களோடு ஜெபித்தவரின் பெயரை எழுதுங்கள்

.............................




தொடங்க முதல்...


வேதத்தை கண்டுபிடியுங்கள்

ஒரு பென்சில், இரேசர்

ஒரு அகராதி










## இப்புத்தகத்தை எப்படி பாவிப்பது..

1. வேதாகமத்தோடுகூட இந்தப் புத்தகத்தைப் பாவியுங்கள்.
2. ஜெபியுங்கள், உங்களால் முடிந்தளவு திறமையாகச் செய்ய தேவனிடம் உதவி கேளுங்கள்.
3. நேரமெடுத்து ஒவ்வொரு பாடத்தையும் முதலில் வாசித்து பயிற்சிகளை செய்யுங்கள்
4. ஒவ்வொரு கேள்வியாக வாசித்து விடையை எழுதுங்கள்.
5. ஒவ்வொரு பாடத்திலும் கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை படித்து அறிந்து கொள்ளுங்கள்.
6. புத்தகத்தை செய்து முடித்ததும், ஆசிரியரிடம் கொடுங்கள். புத்தகம் திருப்பி உங்களுக்குக் கிடைக்கும்.
7. எதிர்கால வாசிப்புக்கும், திருப்பி வாசிக்கவும் உதவியாக புத்தகத்தை வைத்துக் கொள்ளுங்கள்.
8. முடித்த புத்தகத்தை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
9. வேதத்தை தொடர்ந்து வாசி, ஜெபி, இயேசுவுக்காய் வாழ்





பாடம் ஒன்று

## நான் இப்போது ஒரு கிறிஸ்தவன் - இப்போ என்ன?

சிலர் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்ற நிச்சயமில்லாது இருக்கிறார்கள். ஆனால் உங்களுக்கு ஒரு நிச்சயம் உண்டு. நீங்கள் செய்த தவறான காரியங்களை மன்னிக்கும்படி கேட்டு, இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்ன வேளையில் தானே நீங்கள் ஒரு மறுபிறப்படைந்த கிறிஸ்தவனாகவும், அவருடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தவனாகவும் வந்துவிட்டீர்கள். அவர் செய்வேன் என்று வாக்குப்பண்ணியபடியே இவற்றைச் செய்துவிட்டார். அவர் பொய்சொல்ல மாட்டார். அவருடைய வாக்குத்தத்தத்தை (யோவான் 1:12)ல் வாசியுங்கள்.

இப்போது நீங்கள் தேவனின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆவிக்குரிய பிரகாரமாய் வளர்ந்து பலமுள்ள கிறிஸ்தவனாக வளர முடியும்.

தேவன் எப்பொழுதும் நாம் செய்யும் எல்லாவற்றிலும் பிரியப்படுவது இல்லை. ஆனால் அவர் நம்மை நேசிப்பதால் சரியானவற்றைச் செய்து அவரைப் பிரியப்படுத்த உதவுகிறார்.

கீழ்ப்படியாமை என்பது “பாவம்” என்பதற்குரிய இன்னுமொரு சொல். நாம் பாவம் செய்யும் போதும் தேவனுடைய குடும்பத்திலே இருக்கிறோம். ஏனெனில் நாம் அவருடைய மன்னிப்பைக் கேட்கும் போதெல்லாம் தேவன் மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார்.

தேவனை சந்தோஷப்படுத்த நாம் என்ன செய்யவேண்டும் என வேதாகமத்தில் தேவன் எமக்குச் சொல்கிறார்.

அவருடைய பிள்ளைகளில் ஒருவனாக நாம் என்ன செய்ய வேண்டும் என தேவன் சொல்லும் பின்வரும் வேதவசனங்களை வேதத்தில் தேடி வாசித்துக் கற்றுக்கொள்ளுவோம்.

1. உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள். (மத் 5:44)
2. ஒருவருக்கொருவர் தயவாய் இருங்கள். (எபே 4:32)
3. மற்றவர்களை மன்னிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் (லூக்கா 6:38)
4. ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். (ஏசா 41:6)
5. களவு செய்ய வேண்டாம். (யாத் 20:15)
6. ஏமாற்ற வேண்டாம். (எபி 13:18)
7. பொய் சொல்ல வேண்டாம். (நீதி 12:17)
8. உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள். (எபே 6:1)
9. நீங்கள் பேசுவதிலும் செய்வதிலும் கவனமாயிருங்கள். (லூக்கா 6:31)

நாங்கள் பரலோகம் போனபின் நன்மை செய்ய முயற்சிக்க தேவை ஏற்படாது. பரலோகத்தில் பாவமோ, பாவச் சோதனைகளோ இல்லை. ஒவ்வொருவரும், ஒவ்வொரு காரியமும் பூரணமாகவே இருக்கும். நீங்கள் நித்தியம் நித்தியமாக தேவனுடனும், அவருடைய குடும்பத்தினருடனும் வசிக்கலாம்.

## உங்கள் வாசிப்பின் மூலம் நீங்கள் கற்றுக் கொண்டவை எவை?

1. நீங்கள் ஒரு கிறிஸ்தவன் என்பதை எப்படி நிச்சயமாக அறிந்து கொள்ளலாம்?

   ..........................................................

   ..........................................................

   ..........................................................

2. யோவான் 1:9ல் காணப்படும் வேத வசனத்தை எழுதுங்கள்.

..........................................................

..........................................................

..........................................................

3. ஒவ்வொரு வசனத்திலும் காணப்படும் பிழையான வார்த்தையின் கீழ் கீறிடுக.

உன் பெற்றோருக்கு, கீழ்ப்படியாதே, கீழ்ப்படி.

மற்றவர்களுடன் பகிராதே, பகிர்ந்து கொள்.

சிலருடன், எல்லாருடனும் தயவாயிரு.

பகைவர்களை நேசி, வெறு.

4. சரியான விடையைச் சுற்றி வட்டமிடுக

நாம் பின்பற்றி நடக்க வேதாகமத்தை தந்துள்ளார்.

ஆம் இல்லை

வேதத்தில் சொல்லப்பட்டுள்ளவற்றிற்கு கீழ்ப்படிய வேண்டுமென தேவன் சொல்லியிருக்கிறாரா?

ஆம் இல்லை

நாம் செய்யும் எல்லாவற்றிலும் தேவன் பிரியமாயிருக்கிறாரா?

ஆம் இல்லை

எமது தவறுகளை தேவன் மன்னிக்கிறாரா?

ஆம் இல்லை

நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய அவர் உதவி செய்கிறாரா?

ஆம் இல்லை

5. இடைவெளியில் உங்கள் பெயரை எழுதவும்

தேவன் இவ்வளவாய் ..................... அன்புகூர்ந்தார்.

தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தருளினார்.

..................... அவரை விசுவாசித்தால் .....................

கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வான்.

6. பாவத்தைக் குறிக்கும் வேறொரு சொல் (சரியான விடையின் கீழ் கீறிடுக.)

கீழ்ப்படி கீழ்ப்படியாமை

தவறான செயல்கள் தீமைகள்

7. எங்கிருந்தாலும் ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியுமா?

ஆம் இல்லை அநேகமாக சிலவேளைகளில்

8. இயேசு யார்? 1 யோவான் 5:5ல் விடை காணவும்.

.......................................................

9. ஏன் இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார்?
1 கொரி 15:3 வாசிக்கவும்.

.......................................................

.......................................................

.......................................................

10. நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படியாத வேளைகளில் என்ன செய்ய வேண்டும்? 1 யோவான் 1:9 ஐ வாசிக்கவும்.

இ. எங்கள் பாவங்களை கட்டாயம் தேவனுக்கு ……………..

ஈ. எங்களுக்கு எங்கள் பாவங்களை ……………..

11. பரலோகத்தில் நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்று ஒரு வேதவசனம் உறுதிப்படுத்துகிறது. இல்லாத சொற்களை நிரப்ப உங்களால் முடியுமா? 1 யோவான் 5:13.

…………………. நித்தியஜீவன் உண்டென்று …… …………… . அறியவும், தேவ …………………. நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற …………………. இவைகளை எழுதியிருக்கிறேன்.

12. கிறிஸ்தவன் என்ற சொல்லிலுள்ள "கிறிஸ்து" என்பதைக் கீறிடுக.

இந்த வேத வசனங்களை மனனம் செய்யவும்.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." யோவான் 1:12

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." யோவான் 3:16

"நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்(து)தார்." 1 கொரிந்தியர் 15:3

நீங்கள் இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, இயேசு தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறீர்கள், எனவே நீங்கள் அவருடைய பிள்ளைகளில் ஒருவர்.



பாடம் இரண்டு

# இயேசுவுக்காக வாழ்தல்

இயேசுவுக்காக வாழ்வது மட்டுமே உண்மையான மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஒரே வாழ்வாகும்.

வேதத்திலே எங்களுக்கான பல கட்டளைகளைக் காணலாம். அதன்படி வாழும்போது தேவன் வைத்திருக்கும் நமக்கான திட்டங்களின்படி நாம் வாழலாம். இங்கே தேவனால் கொடுக்கப்பட்டுள்ள சில கட்டளைகளைக் காணலாம். அதனால் நமது வாழ்க்கை சமாதானமுள்ளதாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கும்.




தேவன் தம்முடைய உதவியை வாக்குப்பண்ணாமல், எதையும் செய்யும்படி நம்மிடம் கேட்க மாட்டார். நீங்கள் தவறு செய்தால் அல்லது அவரது கட்டளையில் ஒன்றை மீறினாலும் மன்னிப்பு கேட்க வேண்டும். மன்னிக்க எப்போதும் அவர் காத்துக் கொண்டிருக்கிறார்.

நாம் தவறு செய்தாலும் தேவன் நம்மை நேசிக்கிறார். ஆனால் சிலவேளைகளில் நாம் செய்வதில் அவர் பிரியமாயிருப்பது இல்லை. இப்போதும் நீங்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள்.

மக்கள் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை நீங்கள் அறிவீர்களா?



நீங்கள் செய்யும் சில காரியங்கள் சரியா, பிழையா என்ற நிச்சயம் இல்லாவிட்டால் பின்வரும் கேள்விகளைக் கேளுங்கள்.

நான் செய்கிற, சொல்லுகிற காரியம் தேவனைப் பிரியப்படுத்துமா?
இயேசுவைப் போல யோசித்து பேச முயற்சிக்கிறேனா?
என்னை பிறர் நடத்த நான் விரும்புகிற பிரகாரம், மற்றவர்களை நான் நடத்துகிறேனா?
மற்றவர்களிடம் தயவும், அன்பும் காட்டுகிறேனா?
நான் உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறேனா?

சிலவேளைகளில், தவறு செய்ய பிசாசு உங்களைச் சோதிப்பான். அப்படியான சமயங்களில் தேவனிடம் அவருடைய உதவியைக் கேளுங்கள், ஞாபகப்படுத்துங்கள். சோதிக்கப்படுவது பாவமல்ல. ஆனால் சோதனைக்குட்பட்டு தவறு செய்வது பாவமாகும்.



பிசாசு உங்கள் சத்துரு. அவன் ஒரு தந்திரி. தவறு செய்ய உங்களுக்கு சூது செய்வான். தேவன் பிசாசிலும் வல்லமை உடையவர். பிரச்சினை வேளைகளில் தேவன் உதவி செய்வார்.
1 யோவான் 4:4

## நீங்கள் வாசித்த பகுதியிலிருந்து கற்றுக்கொண்டவை எவை?

1. நாங்கள் கட்டாயம் வாழவேண்டிய முறைக்கான கட்டளைகள் 5 எழுதுங்கள்.

   ...........................................................

   ...........................................................

   ...........................................................

   ...........................................................

   ...........................................................

2. எங்கள் பாவங்களுக்காக மன்னிப்பு கேட்கும் போது தேவன் எங்களுக்காக என்ன செய்வார்? 1 யோவான் 1:9 இனை வாசியுங்கள்.

   ...........................................................

3. ஒவ்வொரு வசனத்திற்கும் ஆம் அல்லது இல்லை என்பதற்கு வட்டம் இடுக.

   மக்கள் எங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

   ஆம் இல்லை

   மக்கள் நாங்கள் பேசுவதை உற்றுக் கேட்கிறார்கள்.

   ஆம் இல்லை

   நான் தயவுள்ளவனாய் இருக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார்.

   ஆம் இல்லை

4. உண்மையான வசனங்களுக்குப் பக்கத்தில் X அடையாளமிடுக.

   ...... அனுதினமும் ஜெபத்தில் நான் பேச வேண்டும்.

   ...... வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே நான் பேச வேண்டும்.

   ...... நான் விரும்புகிறபோது மட்டுமே தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும்.

5. தவறு செய்ய தூண்டுபவன் யார்?

   தேவன் பிசாசு இயேசு

6. சரியா அல்லது பிழையா. சரியான விடைக்கு வட்டமிடுக.

துன்பவேளைகளில் தேவனே எனது சகாயர்

சரி பிழை

பிசாசு என்னைத் தவறு செய்யத் தூண்டுகிறான்.

சரி பிழை

சோதிக்கப்படுவது பாவமாகும்.

சரி பிழை

7. சாத்தானைக் காட்டிலும் வல்லமையுள்ளவரும், பெரியவரும் யார்?

...... ...... ......

8. தேவன் நம்மை சோதிப்பாரா? யாக்கோபு 1:13

...... ஆம் ...... இல்லை

9. இந்த வேத வசனத்தை வாசித்துக் கற்றுக்கொள். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்றான். யோவான் 13:35


10. மத்தேயு 28:20ஐ பார்த்து எழுதுங்கள். இது நம் எல்லாருக்குமுரிய தேவனின் வாக்குத்தத்தம்.


"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்"

.............................................

.............................................

.............................................






பாடம் மூன்று

# உங்கள் வேதாகமத்தை வாசித்தல்



உடல் ரீதியான வளர்ச்சிக்கு நாளாந்தம் நல்ல உணவுகளை உண்பது எவ்வளவு அவசியமோ அதேபோல் ஆவிக்குரிய விதத்தில் வளர்வதற்கு வேதத்தை வாசிப்பது அவசியமாயிருக்கிறது.

பூமியில் வசிக்கும் மக்களுக்கான தேவனின் செய்தியே வேதாகமம். இது எல்லா வயதினருக்குமானது. இது ஒரு பெரிய புத்தகம். மொத்தத்தில் 66 புத்தகங்களைக் கொண்டது. 39 பழைய ஏற்பாட்டிலும் 27 புதிய ஏற்பாட்டிலும் உள்ளது.

நாளாந்த வேத வாசிப்பு உங்களுக்கு பின்வரும் காரியங்களில் உதவுகிறது.

- தேவ குமாரனாகிய இயேசுவைப் பற்றி கற்றுக் கொள்ள
- உங்களிடம் தேவன் எதிர்பார்ப்பதை அறிந்து கொள்ள
- நீங்கள் தனிமையாகவோ அல்லது துக்கமாகவோ இருக்கும் போது
- தீர்மானங்களெடுக்க தேவ உதவி தேவைப்படும் போது
- கிறிஸ்தவனாக வாழ்வதற்கு

தினமும் வேதத்தை வாசியுங்கள். ஓய்வுநாட் பாடசாலை புத்தகங்களையும், வீட்டுக்கு எடுத்துச் செல்லும் குறிப்புக்களையும், வேறு வேதாகம கதைப் புத்தகங்களையும் வாசிப்பதால் கற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் உங்கள் வேதாகமத்தை எங்கிருந்தாலும் வாசிக்கலாம். வீட்டில், விடுமுறையில், ஆலயத்தில், ஓய்வுநாட் பாடசாலையில், உங்கள் அறையில், வீட்டுக்கு வெளியே எப்போதும், எவ்வேளையிலும் வாசிக்கலாம்.

வேதாகமத்தை கவனமாக வாசியுங்கள். வாசிப்பது விளங்காவிட்டால் விளங்கிக் கொள்ள தேவனிடம் உதவி செய்யும்படி கேளுங்கள். விளங்கிக் கொள்ள முடியாதவற்றை ஓய்வுநாட் பாடசாலை ஆசிரியரிடமோ, போதகரிடமோ கேளுங்கள்.

வேதத்தை மௌனமாகவோ, சத்தமாகவோ வாசியுங்கள். அந்த வார்த்தையூடாக தேவன் என்ன பேசினார் என யோசியுங்கள்.

வேதத்தை தனியாகவோ அல்லது பிறருடனோ வாசிக்கலாம்.

## வாசிக்க எங்கே ஆரம்பிக்க வேண்டும்?

உங்களுக்கு ஒரு தெரிவு உண்டு. ஆரம்பத்திலிருந்து ஆதியாகமத்திலிருந்து தொடங்கலாம். அல்லது புதிய ஏற்பாட்டிலிருந்து வாசிக்க ஆரம்பிக்கலாம். புதிய ஏற்பாட்டில் லூக்காவின் புத்தகம் ஒரு நல்ல வாசிப்பதற்குரிய தொடக்க புத்தகமாயிருக்கும்.




உமது வாசிப்பிலிருந்து எதைக் கற்றுக் கொள்கிறீர்?

1. இப்போது நீ ஒரு கிறிஸ்தவனாக என்ன செய்ய வேண்டுமென்பதைக் காட்டும் சொற்களை மாற்றியமை.

| | |
|---|---|
| தா.ம.வே.க.தை.த் | சி.வா |
| ...................... | ........ |

2. வேதத்தை வாசிப்பதினால் ஏற்படும் நன்மைகள் 2 தருக.

..........................................................

..........................................................

3. சரியான வசனத்திற்கு முன்பாக X அடையாளமிடுக.

...... நான் வேதத்தை ஒவ்வொரு நாளும் வாசிப்பேன்

...... ஆலயத்தில் மட்டுமே வேதத்தை வாசிப்பேன்

...... வேதாகமம் தேவனுடைய வார்த்தை

4. நான் வேதத்தில் வாசிப்பதை எனக்கு விளங்க வைப்பது யார்?

..........................................................

5. சங்கீதம் 119:105 ஐ வாசி. தேவனின் வார்த்தை உனக்கு என்ன சொல்கிறது?
என் கால்களுக்கு ........................... என் பாதைக்கு ......
.......................

6. இந்த வசனங்களை வாசித்து, மனனஞ் செய்து, ஞாபகத்தில் வைத்து எழுதவும்.
"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" மத்தேயு 24:35

..........................................................

..........................................................

"நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்." சங்கீதம் 119:11

..........................................................

..........................................................


"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." சங்கீதம் 119:105

..........................................................

..........................................................

7. எனது வீட்டில் நீங்கள் ................ வேதாகமங்களைக் காணலாம்.

8. வேதாகமத்தைப் பற்றியும், அதைப் பற்றிய உமது கருத்து என்ன என்பதையும் குறித்து தேவனுக்கு ஒரு கடிதம் எழுதுக.




9. எனக்குப் பிடித்தமான வேத வசனம்

..................... ...... : ......



பாடம் நான்கு

## தேவனோடு பேசுதல்

தேவனோடு, உன்னுடைய பரலோக பிதாவோடு பேசுதல் 'ஜெபம்' என்னப்படும். 1 தெசலோனிக்கேயர் 5:17ல் "இடைவிடாமல் ஜெபியுங்கள்" என்று வேதம் சொல்லுகிறபடி நீ ஒழுங்காக தேவனோடு சம்பாஷிக்க வேண்டும். நாங்கள் எவ்விடத்திலும், எந்த வேளையிலும் ஜெபிக்கலாம்.

தேவன் எப்பொழுதும் நமது ஜெபத்தைக் கேட்க ஆயத்தமாக இருக்கிறார். அவை சத்தமாக அல்லது மிக மெதுவான இரகசியமாக இருந்தாலும் அவர் கேட்பார். தேவன் தூங்க மாட்டார். ஆகவே இரவோ, பகலோ எந்த நேரமும் அவரோடு பேசலாம். அவர் ஒரு போதும் வேலையாயிருப்பவர் அல்ல.

ஜெபிக்க சில பொருத்தமான நேரங்கள்:

புதிய நாளை தொடங்க முன் – உனக்கு உதவிசெய்யும்படி
சாப்பாட்டிற்கு முன் – உணவுக்காக நன்றி செலுத்து
பயப்படும் நேரங்களில் – துணிவைத் தரும்படி
தனித்து அல்லது கவலையாயிருக்கும் போது – சந்தோஷமாயிருக்க உதவி செய்யும்படி கேள்.
தேவை ஏற்படும் போது – அவரால் உனது தேவையை சந்திக்க முடியும் என விசுவாசி, கேள்
பாவஞ்செய்த பொழுது – மன்னிக்கும்படி
வியாதியாயிருக்கும் போது – சுகத்திற்காக அவரிடம் கேள்

தேவை ஏற்படும் போது – அவரிடம் உதவிசெய்யும்படி கேள்
படுக்கைக்கு போகும் முன் – பாதுகாக்கும்படி கேள்.

ஜெபிக்கும் போது ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய சில காரியங்கள்

- உனக்குச் செய்த சில விசேட காரியங்களுக்காக நன்றி செலுத்து
- உனது குடும்பத்தை, நண்பர்களை, சபையாரை, போதகர்களை, நற்செய்தி அறிவிப்போரை ஞாபகத்தில் வைத்துக் கொள்
- உனது சிக்கல்களையும், தேவைகளையும் அவரிடம் சொல்
- ஜெபத்தின் முடிவில் "இயேசுவின் நாமத்தில்" கேட்கிறேன் என்று சொல். (யோவான் 14:13,14)

இயேசு எப்படி ஜெபிப்பது என்று தம்முடைய சீடர்களுக்கு கற்றுக் கொடுத்தார். மத்தேயு 6:9-13 அவர் ஒரு மாதிரி ஜெபம் கொடுத்தார்.



"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமேன்".

சில வேளைகளில் மற்றவர்களோடு சேர்ந்து நீங்கள் ஜெபிக்கலாம். ஆனால் தனிப்பட்ட முறையில் தேவனோடு நீங்கள் நேரம் செலவிடுவது முக்கியம். அவரோடு பக்கத்திலுள்ள ஒரு நண்பனோடு பேசுவது போல பேசுங்கள். அது ஜெபமாகும்.

நீங்கள் உங்களுடைய அறையிலோ, வாகனத்தில் செல்லும் போதோ, பாடசாலையிலோ, ஆலயத்திலோ, எந்த இடத்திலும் ஜெபிக்கலாம். சிலவேளைகளில் முழங்கால்படியிடலாம், மற்ற நேரங்களில் கண்களை மூடிக்கொண்டு ஜெபிக்கலாம். ஆலயத்தில் எழுந்து நிற்கலாம். அல்லது வட்டமாக கைகளைக் கோர்த்துநின்று ஜெபிக்கலாம்.

தேவன் ஜெபத்திற்கும் பதில் தருகிறவர் என்பது ஞாபகமிருக்கட்டும்.

சில சமயம் அவர் பதில் "ஆம்" என்றும் சிலவேளை "இல்லை" என்றும், சில சமயம் "காத்திரு" என்றுமிருக்கும். அவருடைய வாக்குத்தத்தங்களை அவர் நிறைவேற்றுவார். இதை நிச்சயமாக நம்புங்கள். ரோமர் 4:21ல் "தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்று முழு நிச்சயமாய் நம்பி..." என்று வாசிக்கிறோம்.

யாக்கோபு 5:16 "நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது."




மத்தேயு 5:44 "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக் காகவும் ஜெபம் பண்ணுங்கள்"

வாசித்த பகுதியிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டது என்ன?

1. தேவனோடு பேசுவது என்றால் என்ன? சரியான விடைக்கு முன்னால் X அடையாளமிடுக.

   ….. பாடுதல்

   ….. ஜெபித்தல்

   ….. வாசித்தல்

2. 1பேதுரு 3:12 நமது ஜெபத்தைப் பற்றி என்ன சொல்கிறது.

   அவரது கண்கள் …………………

   அவரது காதுகள் …………………

3. தேவனோடு நீங்கள் எப்போது பேசலாம்?

.....................................................................

4. எங்கே தேவனோடு நீங்கள் பேசலாம்?

.....................................................................

5. உண்மையான வசனங்களுக்கு "உ" என எழுதுங்கள்

..... எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தேவனோடு பேசலாம்

..... சிலவேளைகளில் என்னுடைய ஜெபத்தைக் கேட்க தேவன் வேலையாயிருப்பார்.

..... மற்றவர்களோடு சேர்ந்து நான் ஜெபிக்கக் கூடாது.

..... எனது தவறான காரியங்களை தேவனிடம் ஒப்புக்கொள்வது பாவ அறிக்கை

..... நான் பிறருக்காக ஜெபிக்க வேண்டும்

..... தினமும் ஜெபிப்பது ஒரு நல்ல பழக்கம்

6. மத்தேயு 6:9ல் உள்ள "கர்த்தரின் ஜெபத்தை" சத்தமாக வாசித்து மனனஞ் செய்யவும்.

7. சரியான விடைக்கு வட்டமிடுக.

நான் ஜெபிக்கும் போது எப்போதும் முழங்கால்படியிடுவேன்.

ஆம் இல்லை

ஜெபம் என்பது தேவனோடு பேசுதல்

ஆம் இல்லை

தேவனோடு நான் எந்நேரத்திலும், எந்த இடத்திலும் பேசலாம்.

ஆம் இல்லை



பாடம் ஐந்து

# ஆராதிக்கும் இடம்

இயேசுவைப் பற்றியும், தேவனைப் பற்றியும் கற்றுக் கொள்ளும் அநேக இடங்களில் ஒன்று ஆலயம். ஆலயம் சிலவேளைகளில் “தேவனின் வீடு” எனப்படும். இது எல்லா வயதுடைய மக்களும் ஒன்றுசேரும் இடம், அங்கே,

1. தேவனை ஆராதித்து, மகிமைப்படுத்த,
2. தேவனையும் அவர் குமாரன் இயேசுவைப் பற்றியும் அதிகமாய் கற்றுக்கொள்ள,
3. கிறிஸ்தவ நண்பர்களைச் சந்திக்க,
4. தேவனின் குடும்பத்துடன் ஐக்கியப்பட,
5. பாட, ஜெபிக்க, கற்றுக் கொள்ள,
6. தேவன் நமக்குச் செய்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள,
7. கிறிஸ்தவ ஐக்கியத்தில் சந்தோஷமடைய,
8. ஓய்வுநாட் பாடசாலைக்கு சமூகமளிக்க,
9. வேதாகமத்திலிருந்து கற்றுக்கொள்ள,

ஓய்வுநாட் பாடசாலையிலும் சபை செயற்பாடுகளிலும் ஒவ்வொரு வாரமும் பங்கெடுப்பதால், தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து அதிகமாகவும், வேறு பல வழிகளிலும் கற்றுக்கொள்ள முடியும்.

விடுமுறை வேதாகம பாடசாலை, வேதாகம குழுக்கள் அத்துடன் இன்னும் பல செயற்பாடுகளைக் கற்றுத் தர ஆசிரியர்களும், சேவையாளர்களும் இருக்கிறார்கள். தேவனைப் பற்றி அதிகம் அறிந்து கொள்வதால், பலமுள்ளதும், வளர்ச்சி அடைவதுமான கிறிஸ்தவனாக வளர்ந்து வர உதவி செய்யும். ஆலயத்திற்கு ஒழுங்காக போக வேண்டுமென்பது மிக முக்கியம் என்பது இந்தக் காரணத்திற்காகவே.

அநேக மக்கள் ஞாயிறு ஆராதனைக்காக ஆலயத்திற்குச் செல்கிறார்கள். ஆனால் வார நாட்களிலும் நம்மால் சமூகமளிக்க முடியும். ஞாயிறு தவிர்ந்த மற்ற நாட்களிலும் உங்கள் ஆலயங்களில் வேறு பல நிகழ்ச்சித் திட்டங்கள் இருக்கலாம்.

எபி 10:25ல் “சபை கூடிவருதலை விட்டுவிட வேண்டாம்” என தேவன் சொல்கிறார்

ஏன் ஆலயத்திற்கு போக வேண்டும்? என சிறுவர்கள் சில சமயம் கேட்பதுண்டு. ஞாபகத்தில் வைத்துக்கொள்ள சில காரணங்கள்.

நாம் ஆலயத்திற்குப் போகிறோம். ஏனெனில்,

1. வேதம் சொல்கிறது ஒருமித்துக் கூடி தேவனை ஆராதியுங்கள்,
2. போதனைகளாலும், கற்றுக் கொடுத்தலாலும் நாம் தேவனை நன்றாக அறிந்துகொள்ள உதவுகிறது.
3. கிறிஸ்தவ நண்பர்களை சந்திப்பதால் அவர்களைப் பற்றி அறிந்து கொள்கிறோம்.
4. கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு நமக்கு ஒரு சந்தர்ப்பம்
5. எங்கள் சிந்தனைகள் எல்லாவற்றையும் தேவனிடம் ஒப்புவிக்க நமக்கு ஒரு நேரம் தேவை
6. தேவன் மீது நமக்குள்ள அன்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஆலயத்தில் செய்யவேண்டிய பல காரியங்கள் நமக்கு உண்டு. மற்றவர்களோடு சேர்ந்து ஒரே இடத்தில் தேவனை நாம் ஆராதிக்கலாம்.


ஆலயத்தில் நடைபெறுகிற 8 செயற்பாடுகள் இங்கே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.



பாடுதல்



கொடுத்தல்




கற்றுக் கொள்ளுதல்



பகிர்ந்து கொள்ளல்




ஜெபித்தல்



ஆராதித்தல்



பிரசங்கம்



சாட்சி

ஆலயத்திற்கு போகும்போது வேதாகமத்தையும், காணிக்கையையும் கொண்டு போங்கள்.

சபையில் நீங்கள் ஒரு பகுதி. ஆகவே நீங்கள் மரியாதையுடன் நடந்து கொள்வதும், ஆலயத்தை சுத்தமாக வைத்திருக்க உதவுவதும் மிக அவசியம்.

சபையை பற்றி மற்றவர்களுக்குச் சொல்லி, அவர்களை அழைத்து வர முடியும்.

பரலோக பிதாவையும், இயேசுவையும் பற்றி கற்றுக்கொள்வது, சுவாரஷ்யமாகவும், உற்சாகமூட்டுவதாகவும் இருக்கும் ஆலயத்திற்குப் போவதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். இயேசு திட்டமிட்டிருக்கிறபடி வாழ உதவி செய்யும்.

## வாசித்த பகுதியிலிருந்து எதைக் கற்றுக் கொண்டீர்கள்?

1. ஆலயம் என்றால் என்ன? சரியான வசனத்திற்கு முன்னால் X அடையாளம் இடுக.

   ….. தேவனை ஆராதிக்கும் ஒரு இடம்

   ….. பாடி துதிப்பதற்கான ஒரு இடம்

   ….. தேவனைப் பற்றி அதிகமாய் கற்றுக் கொள்ளும் ஒரு இடம்

   ….. சண்டை போடும் இடம்

2. எபிரேயர் 10:25 இந்த வேத வசனத்தை பூர்த்தி செய்க
   "சபை கூடிவருதலைச் சிலர் ………………… போல, நாமும் ……………… ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்"

3. சரியான விடையை வட்டமிடுக.
   நான் ஏதாவது ஒரு சபைக்கு போக முடியுமா?

   ஆம் இல்லை

   ஒழுங்காக ஆலயம் செல்ல வேண்டுமா?

   ஆம் இல்லை

   பிறரை ஆலயத்துக்கு அழைத்துச் செல்லலாமா?

   ஆம் இல்லை

4. புதிய நண்பர்களை சந்திக்கக்கூடிய நல்ல இடமெது?

   ………………………………………………………

5. ஆலயத்தில் நடக்கும் எட்டு (8) காரியங்களை அட்டவணைப்படுத்துக.

………………………… ……………………………

………………………… ……………………………

………………………… ……………………

………………………… ……………………



6. ஆலயத்திற்கு எடுத்துச் செல்லவேண்டிய 2 பொருட்கள் எவை?

............................ ................................

7. ஆலயத்திற்கு சென்று வந்தபின் உமது மனநிலை என்ன?

...................................................................

8. நீர் போகும் சபையின் பெயர் என்ன?

...................................................................

9. உமது போதகரின் பெயர் என்ன?

...................................................................

10. சபையில் நடக்கும் சில செயற்பாடுகள் என்ன?

.......................

.......................

.......................



என்னால் சபைக்கு செய்யக் கூடியது

..................... துப்புரவு செய்தல்



சபையைப் பற்றி ...................... சொல்லுதல்

பிறரை அழைத்து வருதல் ......................

பின்வரும் வேத வசனங்களை பாடமாக்குக.



“விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.” ரோமர் 10:17

“முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.” மத்தேயு 6:33





பாடம் ஆறு

# பிறருக்கு இயேசுவைப் பற்றி சொல்லுதல்

இப்போது நீங்கள் தேவனுடைய பிள்ளை. ஆகவே நீங்கள் இயேசுவைப் பற்றி பிறருக்குச் சொல்ல வேண்டும். நீ ஒரு சாட்சியாகலாம். தங்களுக்கு கடவுள் செய்ததை மற்றவர்களுக்குச் சொல்பவரே சாட்சி.

இயேசு சொன்னார், மாற்கு 5:19ல் "நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்." இயேசு தங்கள் சொந்த இரட்சகர் என்று அறியாத நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள் என நம் எல்லாருக்கும் உண்டு. இயேசு உனக்கு என்ன செய்துள்ளார் என அவர்களுடன் பகிர்ந்து கொள்ள நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

இயேசுவைப் பற்றி மற்றவர்கட்கு சொல்லமுதல் நீ அறிந்து கொள்ள வேண்டிய சில காரியம் உண்டு.

1. நீ ஒரு கிறிஸ்தவன் என்பதை அறிந்து கொள். யோவான் 5:24
2. ஒவ்வொருவரையும் தேவன் நேசிக்கிறார் என்பதை அறிந்து கொள். யோவான் 3:16
3. ஒவ்வொருவரும் பாவம் செய்துள்ளோம் என்பதை அறிந்து கொள். ரோமர் 3:23
4. ஒவ்வொருவரும் அவரவர் பாவங்களை இயேசுவுக்கு அறிக்கையிட வேண்டும். 1 யோவான் 1:9
5. விசுவாசிக்கிறவர்கட்கு தேவன் நித்திய ஜீவனை வாக்குப்பண்ணியுள்ளார். ரோமர் 6:23
6. கேட்கின்ற ஒவ்வொருவரையும் இயேசு ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். மத்தேயு 21:22

உமது நண்பர்கள் அல்லது உறவினர் தங்கள் பாவங்களை இயேசுவுக்கு அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்டால், அவர்கள் உன்னைப் போல தேவ குடும்பத்தின் அங்கத்தவர் ஆகி விடுவார்கள். முழு உலகத்திலுமுள்ள ஒவ்வொரு மனிதருக்காகவும் இயேசு மரித்தார்.

உன்னுடைய புது கிறிஸ்தவ நண்பர்களுடன் பின்வரும் முக்கியமானவற்றை பகிர்ந்துகொள்

1. அவர்களுடைய வேதாகமத்தை தினமும் வாசிக்கும்படி
2. தினமும் தேவனுடன் பேசும்படி
3. ஒழுங்காக ஓய்வுநாட் பாடசாலைக்கும், ஆலயத்திற்கும் சமூகமளிக்கும்படி
4. மற்றவர்களுடன் இயேசுவைப் பற்றிச் சொல்லும்படி
5. பிறருக்கு முன்பாக கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்படி

இயேசுவைப் பற்றி பிறருக்குச் சொல்ல அநேக வழிகள் உண்டு.

இங்கே சில குறிப்புக்கள் - முயற்சித்துப்பார்

1. உன்னுடைய சத்தத்தைப் பாவித்து - இயேசு உனக்குச் செய்ததை சொல்லுதல்
2. இயேசுவைப் பற்றிய சிறிய கதைப் பிரதிகளை விநியோகித்தல்



3. கிறிஸ்தவ வாழ்க்கை வாழுதல்
4. உன்னோடு ஆலயத்துக்கு வர அழைப்புக் கொடுத்தல்
5. கடிதம் அல்லது சிறு குறிப்புகள் ஊடாக பகிர்ந்து கொள்ளுதல்.

மற்றவர்களுக்கு தன்னைப் பற்றிச் சொல்ல வேண்டுமென இயேசு விரும்புகின்றார்.

அவருக்கு சாட்சியாக நீ இருக்க அவர் உன்னை வைக்கவும் இயேசு என்னை ................................... அவருக்கு ஒரு சாட்சியாக
(உனது பெயரை எழுதுக)
கணக்கிடலாம்.

நீர் வாசித்ததிலிருந்து எதைக் கற்றுக் கொண்டீர்?

1. நாம் போய் மற்றவர்கட்கு சொல்ல வேண்டுமென வேதத்தில் எந்த இடத்தில் எந்த வசனம் சொல்லுகிறது?

.........................................................

2. பின்வரும் வினாக்களுக்கு 'ஆம்' அல்லது 'இல்லை' என பதில் எழுதுக.

அ. ஒவ்வொருவரும் பாவம் செய்துள்ளோம் ......

ஆ. தேவன் கிறிஸ்தவர்களை மட்டும் நேசிக்கிறார் ......

இ. ஒவ்வொருவரும் தங்கள் பாவத்தை அறிக்கையிட வேண்டும் ......

ஈ. இயேசு எப்பொழுதும் நம்மை மன்னிக்கிறார் ......

3. ஒரு புதிய கிறிஸ்தவன் என்ன செய்யவேண்டுமென சொல்லுவாய்? சரியானவற்றுக்கு முன்னால் X அடையாளமிடு.

..... ஞாயிற்றுக் கிழமை மாத்திரம் ஜெபி

..... வேதத்தை தினமும் வாசி

..... ஞாயிறு மட்டும் ஆலயத்திற்கு போகவும்

..... இயேசுவைப் பற்றி பிறருக்குச் சொல்

..... மற்றவர்கட்கு முன்பாக கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்

4. இயேசுவை அறிவிக்க பாவிக்கும் 2 வழிகள்

.........................................................

.........................................................

5. ஏன் இயேசுவை மற்றவர்கட்கு அறிவிக்க வேண்டும்?

.........................................................

.........................................................

6. நீர் இயேசுவைப் பற்றி சொல்ல விரும்பும் 3 நபர்களின் பெயர்களை தருக.

........................................

........................................

........................................

7. இயேசுவைப் பற்றிச் சொல்ல நீர் அறிய வேண்டிய 3 காரியங்கள்

...................... என தெரியும்

...................... என தெரியும்

...................... என தெரியும்

8. மற்றவர்களுக்குச் சொல்ல உதவியாக இருக்கும் வேத வசனங்கள் (புத்தகம், அதிகாரம், வசனம்)

........................................



........................................

........................................

........................................

........................................

........................................



9. நீர் மனப்பாடம் செய்திருக்கும் வேதவசனங்களை திரும்ப சொல்லிப்பார்

10. இந்த வேதவசனத்தை மனப்பாடம் செய். யோவான் 14:6

"அதற்கு இயேசு: 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்'."

இந்தப் பாடத்தில் உள்ள முக்கியமான வேத வசனங்கள் இவை. மனப்பாடம் செய்து கொள்வது நலம்.

லூக்கா 2:52

மத்தேயு 24:35

யோவான் 3:36

1 யோவான் 1:9

மாற்கு 11:24

மத்தேயு 6:9

இந்த புத்தகத்தை செய்து முடித்தபின் ஆசிரியர்களிடம் ஒப்படைக்கவும். அவர் பார்வையிட்டு உங்களிடம் திருப்பித்தருவார்.



Foursquare Missions Press © 2017
Living the Christian Life – Tamil